# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1971/10 - 2016 ජූනි මස 14 වැනි අඟහරුවාදා - 2016.06.14

*1971/10 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்க அறிவித்தல்**

*சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) 101 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்*

**மோட்டார் வாகனங்களுக்கான பெறுமதி (விலை) கணிப்பீடு செய்தல்**

*திருத்தப்பட்டவாறான சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) 101 (1) (ஏ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, நிதி அமைச்சர் ரவி கருணநாயக்க ஆகிய நான், இயைபு முறைக் குறியீட்டுத் தலைப்பு இலக்ககங்கள் 87.02, 87.03, 87.04, 87.05 மற்றும் 87.11 ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்படும் இறக்குமதி செய்யப்படும் வானங்களின் சுங்கப் பெறுமதிக் (விலை) கணிப்பீடானது கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுகின்ற போது செலுத்த வேண்டிய அனைத்து சுங்கத் தீர்வைகள் மற்றும் வரிகள் என்பன குறித்த சுங்கப் பெறுமதி அடிப்படையில் கணிக்கப்படுதல் வேண்டும் எனவும் ஒழுங்குவிதிகளை ஆக்குகிறேன். இந்த ஒழுங்குவிதியானது, 2016, யூன் மாதம் 14 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப் பெறுவதுடன் மறு அறிவித்தல் வரை தொடர்ந்து அமுலில் இருக்கும்.*

*87.02, 87.03, 87.04, 87.05 மற்றும் 87.11 இயைபு முறைக் குறியீட்டுத் தலைப்புகளின் கீழ் மோட்டார் வாகனங்களின் சுங்கப் பெறுமதி பின்வரும் (1) அ அல்லது (1) ஆ மற்றும் (2), (3), (4) மற்றும் (5) ஆகிய விடயங்களின் கூட்டுத்தொகையாக இருத்தல் வேண்டும்.*

*(1)*

*(அ) புத்தம் புதிய மோட்டார் வாகனமொன்றின் சுங்கப் பெறுமதி :*

*புத்தம் புதிய மோட்டார் வாகனமொன்றின் சுங்கப் பெறுமதியானது அத்தகைய வாகனங்களின் தயாரிப்பாளரினால் வழங்கப்பட்ட அல்லது தயாரிப்பாளரினால் சான்றுப்படுத்தப்பட்ட விலைப்பட்டியல் மூலம் நிரூபிக்கப்பட்ட பரிவர்த்தனை பெறுமதியாக இருத்தல் வேண்டும்.*

*(ஆ) மேற்குறிப்பிட்ட வகுதி (அ) இன் கீழ் வகைப்படுத்தப்படாத மோட்டார் வாகனமொன்றின் சுங்கப் பெறுமதி :*

*மேற்குறிப்பிட்ட வகுதி (அ) இன் கீழ் வகைப்படுத்தப்படாத மோட்டார் வாகனமொன்றின் சுங்கப் பெறுமதியானது அத்தகைய வாகனத்தினை ஏற்றுமதி செய்யும் நாட்டில் அதனையொத்த அல்லது அதேமாதிரியான புத்தம் புதிய மோட்டார் வாகனமொன்றின் பரிவர்த்தனை பெறுமதியின் (உள்நாட்டில் ஏற்புடையதாகும் வரிகள் தவிர) 85% சதவீதத்திற்குக் குறைவாக இருத்தல் ஆகாது.*

(2) இலங்கை துறைமுகத்திற்கு எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவு ;

(3) இலங்கை துறைமுகத்திற்கு எடுத்துச் செல்வதற்கான காப்புறுதிச் செலவு ;

(4) ஏற்றல், இறக்கல் மற்றும் கையாளுதலோடு இணைந்த இலங்கை துறைமுகத்திற்கு எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவு;

(5) இலங்கை துறைமுகத்தினை மோட்டார் வாகனம் அடையும் வரையில் வாங்குநருக்கு ஏற்படும் தரகு மற்றும் விற்பனைத் தரகுச் செலவு;

பாவனைக் காலங்களின் கணக்கீட்டுக்காக வாகனத்தின் முதற் பதிவுத் திகதிக்கும் கப்பலேற்றப்பட்ட திகதிக்கும் (வார்நாமப்பத்திர திகதிக்கும்) இடைப்பட்ட காலப்பகுதி கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திருத்தப்பட்டவாறான சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) 101(1) (ஏ) ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 2016, மே மாதம் 25 ஆந் திகதிய 1968/11 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் 2016, யூன் மாதம் 14 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப் பெறத்தக்கதாக இத்தால் முடிவுறுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும், 2015 ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ தாபிக்கப்பட்டு பின்னர் திருத்தப்படாத கடன் கடிதத்தினை (கடிதங்களை) அடியொற்றி இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் சுங்கப் பெறுமதியினைக் கணிக்கப்படுவதன் பொருட்டு, 2015, பெப்ரவரி மாதம் 10 ஆந் திகதிய 1901/3 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் தொடர்ந்தும் செயல்வலுப்பெறுவதுடன் ஏற்புடையதாக கருதப்படும்.

ரவி கருணாநயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2016, யூன் 14.

7-520